**மஸ்கெலியா பிரதேச சபை**
**நுவரெலியா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 20 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 மே 21 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜூன் 19 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மஸ்கெலியா பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த 09 மாதங்களுக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ஆண்டின் நீர்க்கட்டண பட்டியலிடல் ரூபா 108,600 நிதிக்கூற்றுக்களில் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரி செய்கின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டின் முத்திரை கட்டண வருமானம் ரூபா 113,351 குறைத்தும் பெறவேண்டிய முத்திரைக் கட்டணங்கள் ரூபா 226,000 கூடுதலாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 யூலை முதல் திசெப்பர் வரையான காலப்பகுதிக்கான முத்திரைக் கட்டணங்கள் கணக்கீடு செய்யப்பட் டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது சரிசெய்கின்றேன். |
| (iii) | முன்னைய ஆண்டிற்காக செலுத்தப்பட்ட கணக்காய்வுக் | சரியாக கணக்கீடு செய்யப்பட | 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை |

| | | | |
|---|---|---|---|
| கட்டணங்கள் மீளாய்வாண்டின் செலவினமொன்றாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | வேண்டும். | தயாரிக்கும் போது சரிசெய்கின்றேன். | |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரிச் சட்டம் | சபையால் அறவிடப்பட்ட ரூபா 115,649 ஆன முத்திரை கட்டண வரி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த வரிச்சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென | புதிய சபை என்பதால் உள்நாட்டு இறைவரி தணைக்களத்தில் பதிவசெய்யப்பட்டிருக்க வில்லை. தற்போது பதிவிற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | பிரதேச சபையின் (நிதி மற்றும் நிர்வாக) விதி 218 | சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடம் என்பன மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்ப்பட்டு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மதிப்பீடு மேற்கொள்ளப்பட வுள்ளது |
| (இ) | நிதிப்பிரமாணம் 880 | பிணைச் சட்டத்தின் பிரகாரம் அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை அறவிடப்பட வேண்டும். | பிணை வக்கவேண்டிய உத்தியோகத்தர் களிடமிருந்து பிணை பெற்றக்கொள்ளப் பட வேண்டும் | அம்பகமுவ பிரதேச செயலகத்திலிருந்து இணைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களிடமிருந்து பிணையை கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய உத்தியோகத்தர்களின் சம்பளத்திலிருந்து அறவிடுவதற்கும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | 1988 மே 17 ஆம் திகதிய 1988/ 22 ஆம் இலக்க உள்ளூராட்சி | வீத வரி அறவிடுவதற்காக ஆதன மதிப்பீடு 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ள வேண்டிய போதிலும் 2010 ஆம் | மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஆதன மதிப்பீட்டிற்காக விலை மதிப்பீட்டு திணைக்களத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | ஆண்டின் பின்னர் மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டிருக்க வில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,897,062 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ஒன்பது மாதங்களுக்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,561,162 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

**மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

2018 ஏப்ரல் 01 இல் நிறுவப்பட்ட 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்கான சபையின் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 6,181,100 | 3,011,447 | 3,702,781 | 2,009,220 | 4,980,000 | 2,630,061 | 1,990,272 | 2,087,370 |
| வாடகை | 7,563,000 | 7,438,974 | 5,182,895 | 4,370,343 | 7,010,000 | 9,230,220 | 8,599,575 | 2,099,165 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,330,000 | 800,000 | 947,531 | - | 1,350,000 | 870,473 | 870,473 | - |
| ஏனைய வருமானம் | 5,590,000 | 565,793 | 1,520,500 | 7,090,712 | 3,690,000 | - | 7,538,626 | - |
| மொத்தம் | 21,664,100 | 11,816,214 | 11,353,707 | 13,470,275 | 17,030,000 | 12,730,754 | 18,998,946 | 4,186,535 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

**வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கேள்வி மூலம் குத்தகைக்கு வழங்கும் ஆதனங்களிலிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,255,250 தொகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | நிலுவை வருமானம் அறவிடப்பட்டு அறிக்கையிடப்ப ட வேண்டும். | நிலுவை தொகை அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கை ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 1,997,080 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 305,000 ஆன முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்தன. | உரிய பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முத்திரைக் கட்டணத்தில் ரூபா 988,414 ககிடைத்துள்ளது. நீதிமன்றத் தண்டப்பணம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சிவனொலிபாத யாத்திரை காலங்களில் பக்தர்களுக்கு வசதிகளை வழங்குதல், வருமானத்தை அறவிடல், தனியார் வாகன நிறுத்துமிடங்கள் மற்றும் தற்காலிக வியாபார செயற்பாடு களுக்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளை பிறப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நிறைவேற்றப்பட்ட இரண்டு உப விதிகள வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன. |

### (ஆ) ஆயுர்வேத வைத்திய சேவை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆயுர்வேத வைத்திய நிலையத்திற்க வைத்தியரொருவர் இணைக்கப்படாமை யால் 2018 ஒக்தோபர் முதல் நிலையம் மூடப்பட்டிருந்தது. நோயாளர் உதவிச் சேவைகள் செயற்படுத்தப்படாமையால் ரூபா 428,608 பெறுமதியான ஆயுர்வேத மருந்து இருப்பொன்று விளைவற்றக் காணப்பட்டது. | நோயாளர் உதவிச் சேவைகளை உடனடியாக சேவை நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஓய்வுபெற்ற ஆயுர்வேத வைத்தியர் ஒருவரை சேவையில் ஈடுபடுத்த தேவையான ஆவணங்கள் அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

**(இ) சுற்றாடல் அனுமதிப்பத்திரம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மஸ்கெலியா பிரதேச சபை 2018 ஆம் ஆண்டின் போது நிறுவப்பட்டதன் பின்னர் பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் வழங்கப்பட வேண்டிய சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வியாபாரங்களுக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கும் அதிகாரம் 2020 பெப்ரவரி 02 ஆந் திகதி கிடைத்துள்ளதால் தற்போது உரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. |

**(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (i) ரிகாட்டன் மீள்சுழற்சி நிலைய வளவில் மலசலகூட கழிவு நீர் முகாமைத்துவத்திற்காக 2016 ஆம் ஆண்டில் ரூபா 1,367,267 செலவிடப்பட்டு அமைக்கப்பட்டிருந்த தொகுதியின் நிர்மாணப்பணிகளை நிறைவு செய்து அதனைப் பயன்படுத்தாத காரணத்தினால் விளைவற்றுக் காணப்பட்டது. | இயலுமான வரை உரிய சேவைகளை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ரிகாட்டன் முகாமைத்துவ நிலையததில் காணப்படும் கலி குழிகளின் வேலைகள் பூர்ததி செய்யப்பட்டுள்ளன. சபைக்கு பௌசரொன்ற கொள்வனவு செய்வதற்குரிய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன |
| (ii) நல்லதண்ணி ஸ்ரீ பாத யாத்திகர்களின் வாகனங்களை நிறுத்துமிடத்தில் ஆரோக்கிய சேவைகள் வழங்குவது பாதிக்கப்பட்டதால் பக்தர்களுக்கு சிக்கல்களுக்கு உட்பட்டிருந்தன. | குறித்த நிர்மாணப் பணிகளை விரைவாக பூர்த்தி செய்து அறிக்கையிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | மலசல கூடக் குழிகள் அமைப்பதற்காக மதிப்பீடு தயாரிக்கப் பட்டுள்ளதுடன் நிதி ஏற்பாடு கிடைத்ததன் பின்னர் வேலையை நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது. |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த 67 கட்டிட விண்ணப்பங்களில் 34 விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தன. | உரிய செயற்பாடுகள் நாளதுவரையாக்கப் பட்டு அத்துமீரிய நிர்மாணங்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2018 ஆம் ஆண்டில் கட்டிடங்கள் விண்ணப்பம் தொடர்பாக குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு வருவதுடன் அத்துமீறிய நிர்மாணங்கள் தொடர்பாக நடமாடும் சேவை மூலம் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 16 பதவிகளில் 70 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆட்சேர்ப்பு தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 வாகன பாவனை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்காக போக்குவரத்தில் 2018 திசெம்பர் 31 ஆந் திகதி கராஜிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த சபைக்குரிய கெப் வண்டியின் திருத்த வேலைகள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடனடியாக புதுப்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புதுப்பித்தல் நடவடிக்கைகளுக்காக ஆளுனரின் அங்கீகாரம் கடைத்துள்ள போதும் சபையின் நிதி நிலைமை போதியளவில் இல்லாமையால் உள்ளுராட்சி மன்ற ஆணையாளரிடமிருந்து நிதிஏற்பாடு கோரப்பட்டுள்ளது. |

### 3.4.2 இனங்காணப்பட்ட நட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆயுர்வேத நிலையத்தில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,718 பெறுமதியான 14 மருந்து வகைகள் மற்றம் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 6,882 பெறுமதியான 3 மருந்து வகைகளும் காலாவதியாகியிருந்தன. | வழங்கல் செயற்பாட்டை உயர் நிலைமையில் வைக்கப்பட வேண்டும். | பொருள் மெய்மையின் போது காலாவதியான மருந்து வகைகள் அகற்றப்பட்டுள்ளன. எஞ்சிய மருந்துகள் அம்பகமுவ பிரதேச சபைக்கு வழங்க கடிதம் அனுப்பிவைக்கப்பட்டு ள்ளது. நோயாளர் சேவைகளை வழங்குவதன் மூலம் எஞ்சிய மருந்துகளை பயன்படுத்த தயார் படுத்தப்பட்டுள்ளது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 1988 இன் பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாகம் விதி 193 இன் பிரகாரம் பாதிடப்பட்ட நிதி ஏற்பாடு மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினம் என்பனவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாடு தொடர்பான விடயங்களை விளக்குவதற்கான கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய விதிப்படி வேறுபாடுகள் தொடர்பாக விடயங்களை தெளிவுபடுத்தும் கூற்றொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை. |